(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 25.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 ஒக்டோபர் 20 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜகத் சமரவிக்ரம

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

“அரசியலமைப்பின் உறுப்புரை 121(1) இன் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "புனர்வாழ்வுப் பணியகம்" என தலைப்பிடப்பட்ட சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமனறத்தின் தீர்மானம் தனக்குக் கிடைத்துள்ளது என நான் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகளின் முழுமையான பரிசீலனை பற்றி உயர் நீதிமன்றம் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது:-

அ. சட்டமூலம் முழுமையாக அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) உடன் ஒவ்வாததாக உள்ளதனால் அது அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே சட்டமாக்கப்படலாம்.

இருப்பினும்,

(i) ‘முன்னாள் போராளிகள்,’ ‘வன்முறையான அதிதீவிரவாதக் குழுக்கள்’ மற்றும் ‘ஏதாவது ஏனைய ஆட்களின் குழு’ போன்வற்றுக்கான அனைத்து குறிப்பீடுகளும் சட்டமூலத்திலிருந்து நீக்கப்பட்டால்; மற்றும்

(ii) ஔடதங்களில் தங்கியிருக்கும் ஆட்கள் மற்றும் சட்டத்தால் இனங்காணப்படக்கூடிய அத்தகைய ஏனைய ஆட்களின் புனர்வாழ்வளிப்புக்கு இச்சட்டமூலம் வரையறுக்கப்பட்டால்.

இந்த ஒவ்வாமை இல்லாதொழியும்.

ஆ. அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) உடன் சட்டமூலத்தின் வாசகங்கள் 3, 4(அ), 4(ஆ) 6(ஆ), 23, 24, 25(2), 27, 28(1), 34, 35 மற்றும் 37 [‘புனர்வாழ்வளிப்பின்’ வரைவிலக்கணம்] ஒவ்வாததாக உள்ளதனால் அவை அரசியலமைப்பின் 84(2) ஆல் வேண்டப்படும் விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே சட்டமாக்கப்படலாம்.

இருப்பினும், குறிப்பிட்ட வாசகங்கள் பின்வருமாறு திருத்தப்பட்டால் குறிப்பிட்ட ஒவ்வாமைகள் இல்லாதொழியும்:-

வாசகம் 3 - 'ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் அல்லது புனர்வாழ்வளிப்பு தேவைப்படும் என சட்டத்தால் இனங்காணப்படக்கூடிய அத்தகைய ஏனைய ஆளொருவரை புனவாழ்வு செய்தல் இந்த பணியகத்தின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சமூக பொருளாதார நியமங்களை உருவாக்குவதன் மூலமாக வினைத்திறனான மீள்ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான சிகிச்சை மற்றும் பல்வேறு சிகிச்சைகளைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கலாம்.'

வாசகம் 4 (அ) – '2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தலும், புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் பிரகாரம் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வைக் கோரும் அல்லது அத்தகைய சட்டத்தால் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்கப்படுவதற்காக தேவைப்படுத்தப்படும் போதைவஸ்துக்களில் தங்கியுள்ள ஆட்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு வழங்குதல்.'

வாசகம் 4 (ஆ) – 'சம்பந்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம் புனர்வாழ்வைக் கோரும் அல்லது அத்தகைய சட்டத்தால் புனர்வாழ்வு வழங்கப்படுவதற்காக தேவைப்படுத்தப்படும் எந்தவொரு ஆளுக்கும் புனர்வாழ்வை வழங்குதல்;'

வாசகம் 4 - பின்வரும் புதிய பந்தியை (உ) சேர்ப்பதன் மூலம் - 'மனித உரிமைகளின் அடிப்படை நியதிகளைக் கருத்திற் கொண்டு புனர்வாழ்வு, சிகிச்சை மற்றும் பின் பராமரிப்பு போன்றவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.'

வாசகம் 6(ஆ) - 'பின்வரும் ஐந்து உறுப்பினர்கள் (இதனகத்துப்பின்னர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்' என குறிப்பிடப்பட்டும்) அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(i) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளதும் புனர்வாழ்வுத் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுமான இரண்டு ஆட்கள்;

(ii) கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளதும் சமூக மீள் ஒருங்கிணைவில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுமான இரண்டு ஆட்கள்; அத்துடன்

(iii) கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளதும் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ளதுமான ஓர் ஆள்.'

வாசகம் 23 - "முன்னாள் போராளிகள், வன்முறையான அதிதீவிரக் குழுக்களின் உறுப்பினர்கள், வன்முறையான அதிதீவிர ஆள் மற்றும் வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்களின் குழு" என்ற சொற்களை நீக்குவதன் மூலம், போதைவஸ்துக்களில் தங்கியுள்ள ஆட்களின் புனர்வாழ்வளிப்பு மாத்திரம் என்னும் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த வாசகம் தகுந்தவாறு திருத்தப்படுவதுடன் சட்டத்தால் அடையாளங்காணப்பட்டதும் அவர்களின் புனர்வாழ்வளிப்பு சட்டத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டதுமான அத்தகைய ஆட்களின் புனர்வாழ்வளிப்பு பணியகத்தால் முகாமைத்துவம் செய்யப்படும் நிலையத்தில் நடைபெறும்.

வாசகம் 23 - சட்டத்துறை தலைமையதிபதியால் முன்மொழியப்பட்டவாறான மற்றும் தீர்மானத்தின் 36 மற்றும் 37 ஆம் பக்கங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட 23(2) முதல் 23(7) வரைக்கும் என்றவாறு இலக்கமிடப்பட்ட வாசகங்களை பின்வருவனவற்றுக்கு அமைவாக புதிய உப-வாசகங்களாக சேர்ப்பதன் மூலம்:-

(i) வாசகம் 23(3)(அ) - 'மற்றும் நிலையத்தில் பேணப்படும் பதிவுகளையும் சம்பவத் திரட்டுப் பதிவேடுகளையும் பரிசோதிக்கலாம்' என்ற சொற்களை இந்தப் பந்தியின் இறுதியில் சேர்ப்பதன் மூலம்.

(ii) வாசகம் 23(5) - 'அத்தகைய ஆள் உடனடியாக அரசாங்க மருத்துவமனை ஒன்றில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கட்டளை மற்றும் அத்தகைய நிலையத்தின் பொறுப்பதிகாரி அரச மருத்துவ அதிகாரியின் கண்டறிதல்களை

உடனடியாக அத்தகைய ஆளை புனர்வாழ்வளிப்பதற்கு கட்டளையிட்ட நீதிமன்றத்துக்குத் தெரிவித்தல் உள்ளடங்கலாக' என்ற சொற்களை இந்த வாசகத்தின் இறுதியில் சேர்ப்பதன் மூலம்.

வாசகம் 24 - 'அல்லது ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத பொருள்' என்ற சொற்களுக்கு பின்னர் 'விதிக்கப்படக்கூடியவாறான' என்ற சொற்களை சேர்ப்பதன் மூலம்.

வாசகம்25(2) - சட்டத்துறை தலைமையதிபதியால் முன்மொழியப்பட்டவாறான மற்றும் தீர்மானத்தின் 40 ஆம் பக்கத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட 25(2) ஆம் வாசகத்தை சேர்ப்பதன் மூலமும் பின்வருவனவற்றுக்கு அமைவாகவும்:-

வாசகம் 25(2) (அ) வின் இறுதியிலும் வாசகம் 25(2) இற்கான காப்புவாசகத்தில் அடைப்புக்குறிகளுக்குள் உள்ள சொற்களை அடுத்து "அல்லது அவ்வாறான ஆளைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணி", எனும் சொற்களின் சேர்க்கை

வாசகம் 25(2)(ஆ) வின் இறுதியில் உள்ள, 'புனர்வாழ்வு நிலையத்தினுள்' எனும் சொற்களை நீக்குதல்

வாசகம் 27 – சட்டத்துறைத் தலைமையதிபதியினால் முன்மொழியப்பட்டு, தீர்மானத்தின் 44 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, 'சட்டவிரோதமாக' மற்றும் 'சட்டமுறையாக' எனும் சொற்களை சேர்ப்பதன் மூலம்.

வாசகம் 28(1) - சட்டத்துறைத் தலைமையதிபதியினால் முன்மொழியப்பட்டு, தீர்மானத்தின் 45 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, "எவரேனும் அதிகாரம் அளிக்கப்பட்ட படை உறுப்பினர்," எனும் சொற்களை நீக்குவதன் மூலமும் "உடனடியாக" எனும் சொல்லைச் சேர்ப்பதன் மூலமும்

வாசகம் 28 - சட்டத்துறைத் தலைமையதிபதியினால் முன்மொழியப்பட்ட பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் – 'பிரிவு 28(1) மற்றும் (2) இன் கீழ் ஏதேனும் தத்துவத்தின் பிரயோகம் பற்றி அவ்வாறான புனர்வாழ்வு நிலையம் எந்த நீதிமுறைப் பிரிவினுள் அமைந்துள்ளதோ அப்பிரிவின் நீதவானுக்கு உடனடியாகத் தெரிவித்தல் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் அல்லது அவரால் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரின் கடமையாதல் வேண்டும்.'

வாசகம் 34 – 34(1) ஆம் வாசகத்தின் இறுதியில் பின்வரும் காப்புவாசகத்தை சேர்ப்பதன் மூலம் –

'ஆயினும் இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்குத் தேவையான ஏதேனும் விடயம் தொடர்பாக விதிளை உருவாக்குவதற்கு பேரவைக்கு தத்துவம் இருத்தலாகாது.'

வாசகம் 35 – தீர்மானத்தின் 29 மற்றும் 30 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் திருத்தப்படுதல் வேண்டும்.

வாசகம் 37 – புனர்வாழ்வு என்பது இந்தச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் மூலம் குறித்துரைக்கப்படும் புனர்வாழ்வு, சிகிச்சை, பின் பராமரிப்பு மற்றும் ஆதரவு ஆகியவற்றுக்கான நடவடிக்கைமுறைகள் மற்றும் நிகழ்சித்திட்டங்கள் ஆகும்.

சட்டமூலத்தின் 17 ஆவது வாசகம் அரசிலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே இயற்றப்படலாம்.

சட்டமூலத்தின் 25(1) ஆம் வாசகம் அரசிலமைப்பின் உறுப்புரை14அ வுடன் ஒவ்வாதுள்ளதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலம் மாத்திரமே இயற்றப்படலாம்.

எவ்வாறாயினும், சொல்லப்பட்ட வாசகத்தின் இறுதியில் 'அல்லது தகவலுக்கான உரிமை சட்டத்தின் ஏற்பாடுகள்' என்னும் சொற்களை சேர்ப்பதன் ஊடாக 25(1) ஆம் வாசகம் திருத்தப்படுமாயின் சொல்லப்பட்ட ஒவ்வாமை இல்லாதொழியும்.

சட்டமூலத்தின் 26 மற்றும் 28(2) ஆகிய வாசகங்கள் அரசிலமைப்பின் உறுப்புரை 11 உடன் ஒவ்வாதுள்ளதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலமும் அரசியலமைப்பின் உறுப்புரை 83 இனால் விதித்துரைக்கப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதன் மீதமைவாகவும் மாத்திரமே சட்டமாக்கப்படலாம்.

சொல்லப்பட்ட ஒவ்வாமைகள்:

(i) வாசகம் 26 இல் 'நியாயமான காரணமின்றி' என்னும் சொற்கள் நீக்கப்படின்;

(ii) வாசகம் 28(2) இல் "உட்பட்ட அத்தகைய எல்லா வழிவகைகளையும்" என்னும் சொற்கள் நீக்கப்படின்,

இல்லாதொழியும்.

வாசகம் 29, அரசியலமைப்பின் உறுப்புரை 3 மற்றும் 4 ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 76 ஆம் உறுப்புரையுடன் ஒவ்வாதுள்ளமையால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையினால் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மை மூலமும் அரசியலமைப்பின் உறுப்புரை 83 இனால் விதித்துரைக்கப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டதன் மீதமைவாகவும் மாத்திரமே சட்டமாக்கப்படலாம்.

'அல்லது ஏதேனும் விதி' என்னும் சொற்களை நீக்குவதன் மூலம் வாசகம் 29 திருத்தப்படுமாயின் சொல்லப்பட்ட ஒவ்வாமை இல்லாதொழியும்.

இன்றைய சபை நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ அறிக்கையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அச்சிடப்படுதல் வேண்டும் என கட்டளையிடுகின்றேன். "

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர்—

(i) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் XXXIV ஆம் பகுதியையும், நான்காம் தொகுதியின் XIX ஆம் பகுதியையும், ஐந்தாம் தொகுதியின் IX ஆம் பகுதியையும் மற்றும் ஆறாம் தொகுதியின் XXI, XXII மற்றும் XXIII ஆம் பகுதிகளையும்; மற்றும்

(ii) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் IV, V, VI, VII, VIII, IX மற்றும் X ஆம் பகுதிகளையும் மற்றும் நான்காவது தொகுதியின் VI, VII மற்றும் VIII ஆம் பகுதிகளையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. சிறப்புரிமைகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த அவர்களால் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2022 ஒக்தோபர் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயங்கள், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பீடு செய்யப்படுமாக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 11.31 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ வீரசுமண வீரசிங்க தலைமை தாங்குவாராக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.1.27 மணிக்கு கௌரவ வீரசுமண வீரசிங்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.07 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

"விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விவாதம் மீண்டும் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

**5. ஒத்திவைப்பு (பெருந்தோட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பின்மை) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்குவாராக" என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.59 மணிக்கு கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த தலைமை தாங்கினார்.)

அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு, தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.